Ragistered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 16 (29 - 05 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை: 101

## மருத்துவபீட மாணவர் அதிகரிப்புக்கு கண்டனம்

பல்கலைக் கழகங்களில் மருத்துவ பீடத்துக்கு அதிக எண்ணிக்கையில மாணவர்களை அனுமதிப்பது என்ற முடிவு குறித்து சிறிலங்கா மருத்துவ சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இம் முடிவானது குறித்த நோக்கத்தைக் கொண்டது என்றும், சரியாகத் திட்டமிடப்படாத செயலென்றும் மருத்துவ சங்கம் வெளியிட்ட அறிக்கை ஒன்று [8ஆம் பக்கம் பார்க்க]

## வளலாய் - கதிரிப்பாயில் கடும் சண்டை

# முன்னேற முயன்ற ராணுவம் புலிப் படையால் விரட்டியடிப்பு

### 10ற்கு மேற்பட்ட இராணுவம் பலி 6 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை வளலாய் கதிரிப்பாய் பகுதி ஊடாக முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவ அணிகளை விடுதலைப்புலிவீரர்கள் எதிர்கொண்டு தாக்கி விரட்டியடித்தனர். காலை 5-30 மணியிலிருந்து மாலைவரை நீடித்த உககிரமான சண்டையில் சிங்கள இராணுவ தரப்பில் பத்திற்தம் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இந்தச் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் 6 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பல நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் இராணுவ கவசவாகனங்கள், டாங்கிகள், சிறு பீரங்கிகள்சகிதம் பலாலி முகாமிலிருந்து வளலாய், கதிரிப்பாய் பகுதிக்குள் ஊடுருவல் செய்தனர். முன்னேறிய இராணுவத்தினர் அச்சுவேலி, தொண்டமானாறு வீதியிலுள்ள தம்பாலை சந்திக்கும் தொண்டமனாறு பகுதியிலுள்ள வெளிக்கள ஆய்வு நிலையத்திற்கும் வந்து சேர்ந்த பொழுது விடுதலைப் புலிகள் படையணிகள் கடுமையானஎதிர்த்தாக்குதலைத் தொடுத்தனர். காலையில் இருந்து பல மணி நேரமாக உககிரமான சண்டை தொடர்ந்தது. மூன்று தடவைகள் முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சிகளும் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

### ராணுவத்தின்தாக்குதலுக்கு 3 பேர் அச்சுவேலியில் பலி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், கதிரிப்பாய், தம்பாலை பகுதிகளில் இடம் பெற்ற இராணுவத்தினரின் தாக்குதல்களினால் மூவர் பலியாகினர். ஒருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் அப்பகுதியிலிருந்து மக்கள் பாதுகாப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மாதகல் கடற்கரையில் விமானக் குண்டுவீச்சு

(நமது நிருபர்)

மாதகல் கடற்கரையோர மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று நண்பகல் 11 மணியளவில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.

மேற்படி பகுதிக்கு வந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மாதகல் கடற்பரப்பை அண்டிய பகுதிகளை வட்டமிட்டு மூன்று குண்டுகளை வீசின. இவை வீழ்ந்து வெடித்ததில் பாக்கியராசா (வயது 58) என்பவர் சிறுகாயத்திற்குள்ளானார். இவரது வீடும் சேதமடைந்தது. (ச)

### முல்லைத்தீவில்உக்கிரமோதல்; ராணுவ தரப்பில் பலர் பலி

ஒரு போராளி வீரச்சாவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி அலம்பில் பக்கமாக முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 11 00 மணியளவில் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது சிலாவத்தைச் சந்தியிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இத் தாக்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### மணலாறில் ஒரு நிமிட அதிரடி 2ராணுவம் பலி; காவலரண் வீழ்ச்சி

(மணலாறு)

மணலாறு மாவட்டம் சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கும் முந்திரிகைக்குள இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்துள்ள இராணுவ காவலரண் ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் திடீர் அதிரடித்தாக்குதல் ஒன்றை மேற் கொண்டனர்.

நேற்றுக் காலை 7.02மணியளவில் மேற் கொள்ளப் பட்ட இத் தாக்குதல் ஒரு

[8 ஆம் பக்கம் பார்க்க]

### அச்சுவேலி பகுதியிலிருந்து 10,000 மக்கள் இடம்பெயர்வு

(அச்சுவேலி)

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற கடும் சண்டையின் விளைவாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தனர்.

அச்சுவேலிப் பட்டினப்பகுதி பத்தைமேனி, தோப்பு ஆகிய பகுதிகளிலிருந்தே இம்மக்கள் இடம் பெயர்ந்தனர். இடம் பெயர்ந்த இம்மக்கள் புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயம், ஆவரங்கால் சிவன் கோயில், நீர்வேலி கிறிஸ்தவ சேவாலயம் ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்றைய தாக்குதல்களினால் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. வைத்தியசாலைப் பகுதியில் உலங்குவானூர்தியொன்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதால் அங்கு தங்கிச் சிகிச்சை பெற்று வந்த சுமார் 20 நோயாளிகள் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி விட்டனர். (பாநி)

> **உள்ளே...,**
>
> இந்திய இராணுவத் தலையீடு தமிழீழத்தில் மீண்டும் ஏற்படுமா?
>
> விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ பேச்சாளரின் விசேட பேட்டி

# வல்வையில் சீன ஜெட் விமானங்கள் அகோர குண்டுவீச்சு: 9 பொதுமக்கள் பலி

### 22 பேர் காயம்: வீடுகள், பாடசாலைகள் நாசம்

(பருத்தித்துறை)

தொண்டமனாறு, வல்வெட்டித்துறை பொலிகண்டி பகுதிகளைச் நோக்கி நேற்று சிறிலங்கா படையினர் நடாத்திய மும்முனைத் தாக்குதலில் ஒன்பது பொதுமக்கள் பலியாகினர் 22 பேர் காயமடைந்தனர் பாடசாலை பொதுக்கட்டடங்கள் பெருந்தொகையான வீடுகள் என்பன சேதமடைந்துள்ளன-

நேற்று அதிகாலை 6 30 மணியளவில் சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான இரண்டு 'சுப்பர் சோனிக்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை ஆரம்பித்தன அதனைத் தொடர்ந்து அவ்ரோ விமானம் மூன்று குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு உலங்கு வானூர்திகள் என்பன தாக்குதல்களை மேற்கொண்டன இதேவேளை பலாலி

(8ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கேக் ஐசிங் வகுப்புகள்

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் திறமை மிக்க ஆசிரியைகளினால் கேக் ஐசிங் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. தொடர்புகள் 1) செல்வி சாந்தி குணரட்ணம் சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாய் (30-5-92)மு ப 9.00 மணி 2) K. யோசவ் சங்கானை றோட் அச்சுவேலி (சூசையப்பர் கோயில் முன்பாக [3.5.92) பி.ப 3 மணி (2603(

## ஆண்டு 5 PAPER CLASS

ஆண்டு 5 புலமைப் பரிசில் Paper Class. தூர இட மாணவரின் வசதிகருதி சனி, ஞாயிறு பி. ப. 4. 00 மணி- 6. 00 மணி நடைபெறும்.

ஆரம்பம 30-05-1992 சனி பி. ப. 4.00, மணி திறமையாகைகுறிப்பிட்டளவுமாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [2607]

## உதைபந்தாட்டப் போட்டி

உரும்பராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி. ஆடும் அணிகள்: சென் றொக் B எதிர்த்து கலைவாணி அணி மோதும், அரியாலை ஐ. வி. க. எதிர்த்து கிறின் பீல்ட் அணிமோதும். இவ்வாட்டம் கோண்டாவில் குமரன் மைதானத்தில்29/5/92 பி. ப.3-30க்கு நடைபெறும். 2601

## தவறிவிட்டது

28.05.92 சேதுநாதன் சுதர்சன், என்பவரது 3 அடையாள அட்டைகள் (சேதுநாதன் சுதர்சன், சிவக்கொழுந்து சேதுநாதன். சேதுநாதன் வசந்தாதேவி) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு பேர்ஸ் ஆனைக்கோட்டைக்கும் மாதகலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லமோன் மோட்டர்ஸ் 166, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழநாடு காரியாலயம் முன்பாக) ஒப்படைக்கவும் (2609)

## தவறிவிட்டது

27. 05. 92 தி. சுதாகரன் [ஜெயா பென்சி ஹவுஸ், 160, நவீன சந்தை யாழ்ப்பாணம்] என்பவரது அடையாள அட்டை, பிரயாண அனுமதிச் சீட்டு அடங்கிய பை ஒன்று பரந்தன்- கண்டாவளைக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள். மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்காவும். சன்மானம் வழங்கப்படும். 2608)

## தேவை

மனை வேம்புவிதை தேவைப்படுகின்றது. மில்க்வைற், யாழ்ப்பாணம். சி/(4460)

## "நீமியா உரம்"

நீமியா உரம் கிலோ ரூபா 15/-, 20 கிலோ ரூபா 260/. அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. (சி/4468)

---

# 4-ம் ஆண்டு வீர அஞ்சலி



வீரப்பிறப்பு 02-07-1969

வீரச்சாவு 29-05-1988

## கப்டன் சீலன்

### முருகன் ஜெயச்சந்திரன் (ஜெகன்)

இவர் பல இடங்களில் இலங்கை இந்திய இராணுவங்களோடு பெரும் தாக்குதல்களில் ஈடுபட்டவர் இறுதியாக வடமராட்சி உடுப்பிட்டி என்னும் இடத்தில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணத்தை தழுவிக்கொண்டார்.

இவருக்கு எமது வீர அஞ்சலித் துளிகள் உரித்தாகட்டும்

குடும்பத்தின் பாரங்கள் கூடிட்ட போதும் நீங்கள்
நாட்டினைக் காத்திட கூடிநடந்தவர்
பகைவர்கள் புற்றுகள் நடுவினில் படுத்தீர்கள்
பாசத்தின் வேதனை மனதினில் சுமந்தவர் நீங்கள்
பண்பான நாட்டினை கட்டியெழுப்பமுன் நீங்கள்
பாழ்பட்ட தீயினில் கருகிப் போய்விட்டீர்கள்
பார்த்திட்ட எம்மனம் கருகிட்ட போதிலும்
முனைப்புடன் அவைகள் முளைவிடுகின்றன
உங்கள் சமாதியில் உள்ளத்தைக் காட்டி நாம்
உண்மையாய் சபதம் ஒன்றினை எடுக்கிறோம்
எத்தனை இன்னல்கள் வந்திட்ட போதிலும் நாம்
நாடென்ற வீட்டினை கட்டியெழுப்புவோம்
நீங்கள் செய்த கடமைகள் தொடர்ந்து நாங்கள்
செய்வோம்
கனவினில் கூட நாம் குனிந்து நடந்திடோம்
அண்ணனின் வழியில் நீங்கள் அன்று நடந்தீர்கள்
இன்று உங்களின் வழியினில் நடக்கிறோம் அண்ணா
இவரின் ஆத்மா சாந்தியடைய தமிழீழத்தை
பிரார்த்திக்கிறோம்

உடுப்பிட்டி வீதி,
தொண்டமானாறு

- குடும்பத்தினர்

[சி-4461]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

கணனி நிகழ்ச்சி முறையாளர் (Computer Programmer) பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992. 06. 20 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத் திட்டம்:**

ரூபா 3050-19x75-4475/- மாதமொன்றிற்கு.

**தகைமைகள்:**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்.

(ஆ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் கணனி நிகழ்ச்சிகளை முறைப்படுத்தும் ஆற்றல்.

(இ) வயது 35 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**

தகுதிகாண் பரீட்சை (Aptitude Test), நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

**குறிப்பு:**

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களைப் பெறவிரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 x10 ச. மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்றபடிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள், பிழையாக அல்லது தெளிவில்லாமல் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

1992. 05. 26

(சி4473)

---

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது.

# VIPER

(வஞ்சக தன்மையுடைய ஒருவன்)

(சி/4469)

---

தொழினுட்பக்கல்லூரி இறுதிப்பரீட்சை 1989/ 1990/ 1991

## ஆங்கில தேசிய தராதரப்பத்திரம் (N.C.E.) வாய்மொழிப்பரீட்சை

மேற்படிபரீட்சை 1992-06-01 ஆம் திகதி தொடங்கவிருப்பதால், பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அன்றைய தினம் முற்பகல 8. 30 மணிக்கு ஆங்கிலத்துறைத் தலைவரைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதிபர்.

தொழினுட் க்கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1992 - 5 - 28

( சி/ 4475 )

---

# நினைவுகூருகின்றோம்...

## 1992-05-29

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ **குட்டி** (சோமன் யோகலிங்கம்-அக்கரைப்பற்று, அம்பாறை)

வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் நான்காவது நாளாக மேற்கொண்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையின்போது திக்கம் பகுதியில் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**பாபு** (நாகராசா சிதம்பரநடராசன் - அல்வாய்)

அரியாலைப் பகுதியில் எமது காவலரண் ஒன்றின்மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**குபேரன் / குமார்** (இராசரத்தினம் உதயகுமார்- முள்ளிவீதி, அரியாலை)

1988 ஆம் ஆண்டு உடுப்பிட்டியில் இந்தியப்படையினருடனான மோதலின்போது தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய

**கப்டன் சீலன்** (முருகன் ஜெயச்சந்திரன் - உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு)

1991 ஆம் ஆண்டு வவுனியா, கல்மடுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

**பல்லவன்** (மகாதேவன் இராசலிங்கம் - பெருவெளி, மூதூர், திருக்கோணமலை)

முல்லைத்தீவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

**உதயன்** (சுப்பிரமணியம் தவராஜா - ஜெயந்திநகர், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4464)





சொற்களுக்கான அர்த்தங்கள் காலப்போக்கில் மாறுதல் அடைவதுண்டு. நாற்றம் என்ற சொல்லின் அர்த்தம் வாசனை என்பதாகும்.ஆனால் இன்றோ அச்சொல் மூக்கைச் சுழிக்கும் அர்த்தமாக குறுகி விட்டது. இவ்வாறே எமது போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் முரடன் என்ற சொல் அதன் நேரடி அர்த்தத்தைக் கொடுக்காமல் வீரன் துணிந்தவன் என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. மிகவும் துணிகரமாக சண்டை செய்பவனை ''அவன் சரியான முரடன்'' என்பார்கள். மானிப்பாயைச் சேர்ந்த ஜெயக்குமார் ''முரடன் முத்து'' என்று அழைக்கப்பட்ட வரலாறும் இத்தகையதே.

1987 ஆம் ஆண்டில் ஒரு நாள் -அப்போது இவன் யாழ் கோட்டை இராணுவமுகாமைச் சூழவுள்ள காவலரண்களின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்தான். குண்டு வீச்சுவிமானங்கள் இக்காவலரண் பகுதியை குறிவைத்துத் தாக்கிக் கொண்டிருந்தன. தன்னுடைய பகுதியில் நின்ற போராளிகளை பதுங்கு குழிகளுக்குள் அனுப்பிவிட்டு உள்ளே சென்றபோது ஒரு குண்டு அந்தக் காவலரண்மேல் வீழ்ந்தது. சிறிது நேரத்தில் ஏனைய போராளிகள் வந்து அந்தக் காவலரணின் இடிபாடுகளை அகற்றினர். உள்ளே ஒரு போராளி வீரச்சாவெய்தியிருந்தான். முத்துவும் எமர்சன் என்ற போராளியும் காயமெதுவுமின்றி உயிர்தப்பியிருந்தனர்.

காவலரணுக்கு மேலிருந்த மரங்கள் முத்துவின் G3 யில் பொறுத்திருந்தன. அவை அகற்றப்பட்டவுடன் முத்துவும் எமர்சனும் வெளியில் வந்தனர். வெளியில் வந்த அவர்கள் முதலில் கண்டது அவர்களை கொண்டு போக எடுத்து வரப்பட்டிருந்த சவப்பெட்டிகளைத்தான். அவர்கள் உயிர் தப்பியிருக்க வாய்ப்பில்லை என்ற காரணத்தினால்ஏனைய போராளிகள் சவப்பெட்டிகளுடன் வந்து இந்த இடிபாடுகளை அகற்றினர். அந்த மாதிரியான நிலையில் சவப்பெட்டியைக் கண்டவுடன் எவரது மனதும் திடுக்குற்றிருக்கும். ஆனால் முத்து அதைக்கண்டு புன்னகைத்தான் தமக்காகக்கொண்டுவரப்பட்ட சவப்பெட்டியைமுதலில் கண்ட போராளிகள் முத்துவும் எமர்சனும் தான் -இன்று முகாம் தாக்குதலுக்கு போகும் போது தமது சவப்பெட்டிகளை தாமே கொண்டு செல்லும் எமது போராளிகளின் மனவுறுதி பற்றி உலகமே வியக்கிறது. மரத்துப் போன நெஞ்சங்களைக் கூட அந்தக் காட்சி உறுத்துகிறது.

அக்காலத்தில் கோட்டைக் காவலரண் பகுதியில் கடமையாற்றிய எல்லோருமே முத்துவின் ஆற்றலைக் கண்டு வியந்தவர்கள்தான். பண்ணையில் அமைந்திருந்த பொலிஸ் விடுதிஇராணுவமுகாம்மீதான தாக்குதலில் முதன்முதலில் உள்ளே சென்ற அணியினரில் ஒருவனாக இருந்தான் இவன். வெற்றிகரமான அந்தத் தாக்குதல் முடிந்த பின்னர் தான் அத்தாக்குதலில் ஈடுபட்ட துரை, ஹிம்மன் ஆகிய போராளிகளைக்காணவில்லை என்பது தெரியவந்தது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதும் தெரியவில்லை. அவர்கள் வீரச்சாவடைந்திருக்கலாம் -அல்லது காயமடைந்து மயங்கிய நிலையில் கிடக்கலாம். எனவே அவர்களைக் கண்டு பிடிக்கும்படி அத்தாக்குதலுக்கு தலைமைதாங்கியவர்களில்ஒருவரான அப்போதைய யாழ் மாவட்டத்தளபதி கிட்டு உத்தர விட்டார். தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்திற்குக் கிட்டச் செல்ல முடியாத நிலைமை - கடந்த இரவுதான் தாக்குதல் நடைபெற்றதென்பதால் கோட்டையிலிருந்த இராணுவத்தினர் அப்பகுதியைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணமிருந்தனர். சாதாரணமான நாட்களிலேயே அதுவும் இரவில் கூட அந்தப்பக்கம் செல்லமுடியாது -இரவைப்பகலாக்கும் வண்ணம் சக்திவாய்ந்த மின் விளக்குகள் அந்தப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்தன. அப்பகுதிக்குள் மீண்டும் நுழைவதென்பது தற்கொலை முயற்சியேதான். ஆனாலும் முத்து அப்பகுதிக்குள் நுழைந்தான் வீரச்சாவெய்தியிருந்த நிலையில் கிடந்த துரையினதும் ஹிம்மனினதும் புகழுடல்களை மீட்டுவந்தான். வசிட்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்றது போல் துணிச்சலுக்காககிட்டுவினால்வியந்து பாராட்டப்பட்டான் முத்து. இப்படியான துணிச்சல் திறமை காரணமாகத்தான் பின்னாளில் இவன் கோட்டைப் பகுதி காவலரண்கள் அனைத்துக்கும் பொறுப்பாளனாக இருக்க முடிந்தது

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தில்தான் இவனுக்கு இயக்கத்துடன் தொடர்பு கிடைத்தது. அதற்குப் பின் ஒரு சராசரி மாணவனாக இருக்க அவன் மனம் ஒப்பவில்லை. தனது பள்ளிக்கூட நண்பர்களான குட்டிக்கண்ணா போன்றோருடன் இயக்கத்தில் முழுநேர உறுப்பினனாக இணைந்து கொண்டான். ஆரம்பத்தில் உணவு உற்பத்திக்குழு சம்பந்தமான வேலைகளே இவனுக்கு வழங்கப்பட்டிருந்தன. விடுதலைப் போராட்டத்தின் ஓர் அம்சமான சுய உணவு உற்பத்தியின் அவசியம் பற்றிய பிரச்சாரத்தினை மேற்கொண்டான். உணவு உற்பத்தியில் மக்களை ஈடுபாடு கொள்ள வைப்பதற்காக விதைகள், கன்றுகள் என்பனவற்றை பல்வேறுகிராமங்களுக்கும்சென்று திரட்டி வந்தான். மானிப்பாய் பிரதேசத்தில் வீட்டுக்கொரு தென்னங் கன்று என்ற விகிதத்தில் விநியோகித்தான். இவ்வாறு விடுதலைக்காக மிகக்கடுமையாக உழைத்தாலும். ஆயுதப் பயிற்சி பெற்று களத்தில் நிற்கவே இவன் மனம் விரும்பியது. ஏற்கனவே இவனிடம் சொந்தமாக 303 றைபிள் இருந்தது. அதை நன்றாக இயக்கத்தெரியும். இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டவுடன் அதை இயக்கத்திற்கே வழங்கியிருந்தான். ஆயுதப் பயிற்சி முடிவடைந்ததும் மீண்டும் உணவு உற்பத்திக் குழுவிலேயே பணிபுரியுமாறு பணிக்கப்பட்டான். ஆயினும் எப்படியோ அவன் கோட்டைப் பகுதிக் காவலரண்பகுதிக்கு செல்லும் குழுவில் இடம்பெற்றுவிட்டான்.



லெப். முத்து

ஒரு போராளியினால்தாங்க முடியாத விடயம் எதுவென்றால் அவனது கண்ணெதிரில் அவனைத் தவிர்த்துவேறு போராளிகளை தாக்குதலுக்கு தெரிவு செய்வதுதான். தொனைத் தொடர்பு முகாம் மீதான தாக்குதலை மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்ட குழுவில் இவன் இடம் பெறவில்லை. ஆனால் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இவனும் தாக்குதலில் கலந்து கொண்டிருக்கிறான் என்பது தெரியவந்தது. இவனது சுபாவத்தை நன்கு தெரிந்த இவனது பொறுப்பாளர் இவனைக் காணாதது போல நடந்து கொண்டார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து இந்திய அரசின் நோக்கத்தை நிறைவேற்ற இந்தியப்படையுடன் இணைந்து வந்த குழுக்கள் புலிகள் மீது தாக்குதல் தொடுத்தனர். சமாதானத்தின் பெயரால் புலிகளின்உயிர்கள் பலிவாங்கப்பட்டுக்கொண்டிருந்தன. இந்தியப்படை சமாதானத்திற்காக இங்கு வரவில்லை என்பது வெட்டவெளிச்சமாகியது எனவே அக்குழுக்களுக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்ள மன்னாருக்கு செல்வதற்கு ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டது அதில் இவனும் இடம் பெற்றிருந்தான். அக்காலத்தில் இவன் ஜொனி தலைமையிலான விஷேடபடைப்பிரிவில் அங்கம் வகித்தான்.

இந்தியப்படையுடன் மோதல் தொடங்கியதும் இவனதுமுழு ஆற்றலும் வெளிப்பட்டது இணுவில், மானிப்பாய் பகுதிகளில் இவன் இந்தியப் படையினரை ஓடவைததான். கல்லுண்டாய் பகுதிகளில் இந்தியப்படையினரைத் திணறடித்தான் மோதல் நாள் கணக்காக நீடித்தது எண்ணற்ற இந்தியப்படையினர் மாண்டனர் இந்தியப்படையினர் சரணடையும் கட்டம் நெருங்கியது இவன் இந்தியப்படையினரின் பதுங்கு குழியை நோக்கிப்பாய்ந்தான் அவ்வேளை அவர்களது வேட்டுக்களிலொன்று இவனைத்தாக்கியது. வெட்டவெளி-காயமடைந்த நிலையில் இவன்- இந்நிலையில் இவன் தான் நேசித்த தனது G-3ஐ. தனது நண்பர்களை நோக்கி வீசினான். அதை ஒருபோராளி கைப்பற்றுவான் என்ற நம்பிக்கையுடன் கண்ணைமூடினான்.

1983ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி நல்லை ஆதீனத்துக்கு எதிரில் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரன் சங்கரின் ஓராண்டு நினைவாக ஒட்டப்பட்டிருந்த அந்த அஞ்சலிச்சுவரொட்டியில் காணப்பட்ட கவிதை பின்வருமாறு ஆரம்பமாகியிருந்தது:

''வெட்டி வீழ்த்தியும்
வேங்கை பெப் போதும்
தொட்ட ஆயுதம்
பறிகொடா மரபை
கெட்டியாய்க்
கொண்டாய்''

இவன் பாடசாலை மாணவனாக இருந்தபோது இந்த வரிகளைப் படித்திருப்பான். பின்னர் 16-10-87 இல் இவனும் அந்த வரிகளுக்கு உதாரணமானான்.

---

# முன்னை இட்ட தீ

**இனியவன்**

தாமரைப் பூவின் மீதமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருந்த சரஸ்வதி தேவி கலங்கித் துடித்தாள். சுப்பிரமணியம் பூங்கா, யாழ்ப்பாண மாநகராட்சிமன்றம், மத்திய கல்லூரி, திறந்தவெளிக் கலை அரங்கு, படமாளிகை, வீரசிங்கம் மண்டபம் அஞ்சல் அலுவலகம்,தொலைத்தொடர்பு நிலையம்,எரிபொருள் நிரப்பு நிலையம், விளையாட்டரங்கு என்றுபல்வேறான பொது மக்கள் கூடும் நிலையங்கள் புடைசூழ நடுநாயகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாண நூல் நிலையத்தின் முன்பாக அமர்ந்திருந்த சரஸ்வதிதேவி வேதனையால் வெதும்பினாள். விளையாட்டரங்கின் பின்புறமாக இருந்து ''அப்பே றட்ட'' ''அப்பே ஆண்டுவ'' எனக் கூச்சலிட்டபடி காக்கி உடைகளோடும் நவீன ஆயுதங்களோடும் முன்னேறிவந்த காடையர் கூட்டத்தைக்கண்டு சரஸ்வதிதேவி செய்வதறியாது திகைத்தாள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கையும் கூட அறிந்திருந்த சரஸ்வதிதேவிக்கு சிங்கள அரசின் சூழ்ச்சித்திட்டத்தைப்புரிந்து கொள்ள முடியாமல் தவித்தாள். தமிழ்மக்கள் நடத்தும் உரிமைப் போரின் முனையை மழுங்கடிக்கவெனக் கங்கணம் கட்டிக்கொண்ட சிங்கள அரசு, அதிகாரம் எதுவும் இல்லாத மாவட்ட அபிவிருத்திச் சபையைதமிழ்மக்களின் தலையில் கட்டியடித்துவிட சூழ்ச்சி செய்தது. இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமிழ்மக்களின் பிரதேச எல்லைகளைப் பாதுகாக்கும் எனப் பிதற்றிக் கொண்டு சில கருங்காலிகள் வாக்கு வேட்டைக்கு களம் அமைத்துக் கொண்டனர். பதவி நாற்காலிகளின் சுகம் பற்றிய கற்பனையில் கிடந்த அத்தகையவர்கள் ஒருபுறமும். தமிழ்மக்களின் போராட்டத்தை நசுக்கிவிடக் கங்கணம் கட்டிக்கொண்ட ஆட்சியாளர் ஒருபுறமும், போட்டியிட்டுக் கொண்டிருந்த வேளையில் தான் 1981 மே 31 ஆம் திகதி நள்ளிரவு யாழ்ப்பாணம் நகரின் மேலாகக் கரும்புகை பரவியது.

நாச்சிமார் கோயிலடியில் தேர்தல் பிரசாரக் கூட்டம் குழப்பப்பட்டதாக செய்தி பரவியதும்,வேலியே பயிரை மேய்வதுபோல காவல் கடமைக்கென நியமிக்கப்பட்டிருந்தவர்கள் நகருக்கு தீ மூட்டினர். கடைகள் சாம்பலாயின. பஸ் நிலையம்தரைமட்டமாகியது. கண்ணில் பட்டவர்கள் சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டனர். தப்பியோடியோர் சுடப்பட்டனர் சிங்களப் படைகள் கோரத் தாண்டவமாடின. யாழ்ப்பாண நகரமெங்கும் கரிய புகை பரவியது.

ஆனால் தேர்தல் பிரசாரத்திற்கென யாழ்ப்பாணம் வந்து தமிழ் மக்களிடம் வாக்கு வேட்டை நடத்திக் கொண்டிருந்த பச்சை அரசியல் வாதிகள், ஒக்ஸ்பேர்ட், கேம்பிறிட்ஜ் மூளைகளுக்கு தமிழ் மக்களின்கல்வியறிவும்அரசியல் முதிர்ச்சியும் ஆபத்தான எதிரிகளாக தோற்றமளித்ததுவோ? என்னவோ? சீப்பை ஒழித்து வைத்துவிட்டால் கல்யாணத்தை நிறுத்தி வைத்து விடலாம் என்று மடைத்தனமாகக் கற்பனை செய்யும் முட்டாள்களைப்போல யாழ் நூலகத்தை நாசமாக்கி விட்டால் தமிழ்மக்களின் கல்வியறிவை அழித்துவிடலாம் என்று திட்டமிட்டுக்கொண்டனர். பல்லாண்டுகளாக சேர்த்து வைக்கப் பட்டிருக்கும் அரிய பொக்கிஷங்கள், கலாசார சின்னங்கள், மற்றும் தொன்மைமிகும் வரலாற்றுப் பதிவுகள், என்பனவற்றை எல்லாம் துவம்சம் செய்து விட்டால் தமிழ்இனம் இருந்த சுவடே தெரியாமல் மறைந்து விடலாம் என்று கனவு கண்டனர். ஒரு இலட்சம் புத்தகங்கள் எரிக்கப்பட்டுவிட்டால் அந்தத் தீயில் தமிழரின் அறிவுத்தாகம் வெந்து அழிந்து போகும் என்றுகற்பனை செய்தனர். ஊழித் தீயென எழுந்த பெரும்நெருப்பில்யாழ்ப்பாண நூலகமும் அகப்படலாயிற்று.

இராமர் படைகள் கொழுத்திய தீயில் இலங்கை ஒருமுறை எரிந்ததாக இதிகாசம் கூறும். சிங்களப்படைகள்கொழுத்திய பெரு நெருப்பு கலாசார படுகொலையின் சாட்சியாக- (Cultural Genocide) தமிழின விரோதப் போக்கின் உச்சக் கட்டமாக எழுந்து சுவாலை பரப்பியது. வான்வரை உயர்ந்தகரியபுகை கண்டு கலங்காத நெஞ்சமே இடையாது எனலாம்.

இந்தப் பெரும் நெருப்பின் பொறி தமிழர் நெஞ்சங்களில் உரிமைப்போரின் கனலாகப் பதிந்தது. அதனால் தானோ என்னவோ சாம்பலில் இருந்தும் உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையைப் போல அதே நூலகக் கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் விடுதலைப்புலிகள் களம்அமைத்து சிறிலங்காவின் சிங்களப் படைகள் குடியிருந்த கோட்டை முகாம்மீது தாக்குதல் நடத்தினர் சிங்களப்படைகள் உயிரைக்காக்க ஓட்டமெடுக்க வேண்டியிருந்தது.

பதினொரு ஆண்டுகள் பறந்தோடிப்போய்விட்டது. அறிவுக்கண்ணை திறந்துவிட்ட யாழ்ப்பாண நூலகம் தீயில் குளித்தபின் பதினொருஆண்டுகள் பறந்தோடிப் போய்விட்டது. இந்த மண் எங்களின் சொந்த மண் என்று உரத்த குரலில் ஆவேசமாக ஆர்ந்தெழுந்தபடி தமிழ் மக்கள் தத்தம் அப்புவும் ஆச்சியும்,வாழ்ந்த தாயகப் பரப்பை காக்க போரிட்டுக் கொண்டுள்ளனர். இந்த போர் வெற்றி பெறும் நாளில் வரும் காலத்தலைமுறை சரித்திரச் சின்னங்களாக இந்தக் கட்டங்களைப் பேணும் எனலாம்.

# ‘கஸ்தூரியின் ஆக்கங்கள்’ - ஒரு பார்வை

வானதியும், கஸ்தூரியும் ஆனையிறவுச் சமரில் இந்த மண் இழந்து போன இரு பெண் கவிகள். வானதியைப் பற்றி அவரின் கவிதைகளைப் பற்றி சில மாதங்களுக்கு முன் வந்த ‘வானதியின் கவிதைகள்’ கவிதைத் தொகுப்பு மூலம் வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.

அதேபோல் கஸ்தூரியால் எழுதப்பட்ட ‘கஸ்தூரியின் ஆக்கங்கள்’ என்ற நூலை விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர். இந்நூலில் கஸ்தூரியின் 17 கவிதைகளும், 4 சிறுகதைகளும் மேலதிகமாக ஒரு கடிதமும் வந்துள்ளன.

வானதியும், கஸ்தூரியும் இரு இளம் கவிகள். ஆனால் அவர்களின் கவிதைகளில் உள்ள உயிர்த் துடிப்பும், இதயத்தை அசைத்துவிடும் உருக்கமும் வியக்கத்தக்கன. இதற்குக் காரணம் என்ன? விடை மிக இலகுவானது.

ஏனெனில் இவர்கள் சத்தியத்திற்காகப் போராடியவர்கள். உண்மைகளை நேரடியாகக் கக்க ஒருபோதும் தயங்காதவர்கள். போலியான, மாயையான சமூகக் கட்டுமானங்களிற்குள் சிக்குப்படாமல் உயர்ந்து நின்று வித்தியாசமாகச் சிந்தித்தவர்கள்.

அதனால்தான் இவர்களின் வார்த்தைகளிற்குள் இந்தஉலகத்தை அசைத்துப் பார்க்கும் சக்தி குடிகொண்டது. சத்தியம் பிறப்பெடுத்தது.

சரி, இனி கஸ்தூரியின் கவிதைகளுக்கு வருவோம். 1989 மாவீரர் நாளுக்காக வரையப்பட்ட ஓவியத்துக்கு எழுதப்பட்ட சிறு கவிதையுடன் கஸ்தூரியின் கவிதைகள் ஆரம்பிக்கின்றன. ஓர் போராளி - மாவீரன் ஒருவனின் உடலை சுமந்து செல்லும் அவ்ஓவியத்தின் மேல்

‘இதயத்தில் -
இனத்தின் விடுதலை
கரத்தில் -
ஒரு தேசத்தின் வரலாறு
சுதந்திர வாசல் வரை
இவன்
சுவடுகள் ஓயாது’

என ஏழு வரிகள் பதியப்பட்டிருந்தன. இந்த வரிகளைச் சற்று ஆழமாகப் பாருங்கள். தான் சொல்ல வந்த கருத்தை மிக ஆழமாகவும், உருக்கமாகவும் இச்சிறுகவிதை வடிவம் அழகாகச் சொல்லி விட்டுச் செல்கின்றது அல்லவா ?

இக்கவிதையைத் தொடர்ந்து சிறிதும், பெரிதுமாகப் பதினேழு கவிதைகள் இந்நூலில் பிரசுரமாகி உள்ளன. ஒவ்வொரு கவிதைகளிலும் இந்த மண் சந்தித்த மறக்கமுடியாத வரலாற்றுச் சம்பவங்களைக் கஸ்தூரி அவருக்கே உரிய தனித்துவமான பார்வையில் பார்க்கிறார்.

மில்லரின் தியாகத்தைச் சுமக்கும் பதில்களைப் பார்த்துக் கஸ்தூரி கூறுகிறாள்.

‘நம் தேசத்து
மதில்களுக்குத் தான்
எத்தனை எத்தனை
மகிழ்ச்சி
மச்சு மதில்களே!
நாங்கள் உங்களைப்
பார்த்து
கண்களைத் துடைக்க
வில்லை
மில்லரைப் பார்த்து
விம்மி அழுகின்றோம்.’

இவ் வரிகளின் மூலம் கஸ்தூரி, மில்லரின் இழப்பின் பின் அவனை நினைத்து இந்த தேசம் பட்ட வேதனையையும் பெருமையையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்துகின்றார்.

அக் கவிதையை அடுத்து அன்னை பூபதியின் தியாகத்தைத் தொடர்ந்து இரு கவிதைகளில் கஸ்தூரி வடித்திருக்கிறார். ‘கடலம் அவளது கசிமத்து நகர்கிறது’ என்ற தலைப்பில் அன்னையைப் பற்றி வடித்துள்ள கவிதை இக்கவிதைத் தொகுப்பின் மிகச் சிறந்த கவிதையாக உள்ளது. அக் கவிதையின் ஒவ்வொரு வரியும் இதயத்தைத் துளைத்து அதன் அடி ஆழத்தில் அடையாளங்களை பதிக்கின்றன.

‘காலையில் வந்த சதிரவன்
கல்லறை வெளிச்சத்தில்
கண்கூசிக் கை கூப்ப
மாலையில் வந்த
மஞ்சள் நிலவு - அவள்
கல்லறையின் ஒளியை
கடன் கேட்டு நிற்கின்றது.’

என்ற வரிகளில் அன்னையின் தியாகத்தைப் பார்த்து வியந்து நிற்கும் கஸ்தூரி, அடுத்த பகுதியில்

‘தாயே ... !
பிரபஞ்ச வரலாற்றின்
பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத் தோடு
உன்னை நீ
செத்துச் செத்து
செதுக்கிக் கொண்டாய்’

என்று அன்னைக்கே அவரின் தியாகத்தின் உயர்ச்சியை சொல்கின்றார்.

இந்நூல் முழுவதும், அடக்கு முறைகளையும், அநியாயங்களையும் கண்டு கொதித்தெழும் கஸ்தூரி ‘கொழுந்துக் கூடைகள்’ எனும் சிறு கவிதையில் மலையகப் பெண்களின் விழிப்பிற்காகவும் ஏங்குகின்றாள்.

‘சுரண்டல் தராசுகளில்
கொழுந்துக் கூடைகளை
கொழுவி விட்டு



தேனீரு ... -இத்
தேயிலைச் செடிகள ......
அக்கினியாய் அணிவகுத்து
அவலங்களை எரிப்பதெந்
நாள்?’

கஸ்தூரியின் ஏனைய கவிதைகளும் ஒவ்வொரு நிகழ்வையும் அவருக்கே உரிய புரட்சிகர விழிப்புணர்வோடு பார்க்கின்றன.

பத்தாவது கவிதையான ‘மறைந்தவர்களே நீங்கள் மலடர்கள் அல்ல’ என்ற கவிதையும், ‘திலீபன் அண்ணா’ என்ற பதின்மூன்றாவது கவிதையும் ஒரே கவிதை வரிகள் பலவற்றை அப்படியே மாறாமல் கொண்டுள்ளன.

‘பிரச்சினைக்கு மேல்
பிரச்சினை வந்ததால்
அடிப்படைப் பிரச்சினை
அறவே மறந்து விட்டது
இன்று .... இவர்கள் ..’

எனத் தொடரும் சில வரிகள் இரண்டு கவிதைகளிலும் உள்ளன. கஸ்தூரியினால் ஏதோ ஓர் காரணத்திற்காக இரு கவிதைகளிலும் எழுதப்பட்ட இவ்வரிகளை பதிப்பித்தோர் தவிர்த்திருந்தால் இந்நூலுக்கு சிறப்பாக இருந்திருக்கும்.

நூல் அமைப்பிலும் சில குறைபாடுகள் உள்ளனதான். முன் அட்டையில் உள்ள ‘கஸ்தூரியின் ஆக்கங்கள்’ என்ற நூலின் பெயர் நேராக எழுதப்பட்டிருக்கலாம். அதைவிட கவிதைகள் எந்தவொரு ஒழுங்கு முறையிலும் தொகுக்கப்படவில்லை. எழுதப்பட்ட காலத்தின் அடிப்படையில் கவிதைகள் தொகுக்கப்பட்டிருந்தால் கஸ்தூரியின் கால வளர்ச்சியை இலகுவாக அடையாளம் காணக் கூடியதாக இருந்திருக்கும். இந்தச் சிரமமும் வாசகர்களையே சென்றடைகிறது.

அடுத்து, கஸ்தூரியின் சிறுகதைகளை எடுத்துக் கொள்வோம். தான் வாழ்ந்த சமூகத்தில் நடந்த - நடக்கின்ற சமூக அநீதிகளையும், ஆக்கிரமிப்பின கொடூரங்களையும் கருவாகக் கொண்டு கஸ்தூரியின் சிறுகதைகள் வடிவம் பெறுகின்றன.

முதலாவது சிறுகதையான ‘நிர்ப்பந்தங்கள்’ மிக நீண்டு இருபத்தாறு பக்கங்களை தன்னகத்தே எடுக்கிறது. இதில் வாசுகி என்ற பெண்ணைத்தான் நினைக்கும் புரட்சிகர சமூக வாழ்வை கடைப் பிடிக்கும் பெண்ணாக வடிவமைத்துக் கொண்டு அவள் மூலம் சமூகத்தைப் பார்க்கிறார் கஸ்தூரி.

இந்தச் சமூகத்தைச் சூழ்ந்திருக்கும் ஆண் மேலதிக்க வாத கருத்துலகம் பெண்களை அடிமை வாழ்விலிருந்து எழ

**இளவேனில்**

விடாமல் எப்படி எல்லாம் தடுத்திருக்கிறது என்பதை விளக்கும் இவரது பேனா, அந்த மூட வழக்கங்களை கண்டு குமுறி எழுகிறது.

வாசுகியின் அக்காவினது மரணச் சடங்கில் வாசுகிக்கு எழும் எண்ணவோட்டம்தான் இந்தக் கதை. அக்காவின் மரணத்திற்காக ஒப்பாரி வைக்கும் இந்தச் சமூகம் அவள் வாழும் காலத்தில் எப்படிப் பார்த்தது என்பதை கேள்வியாகக் கேட்கிறாள் வாசுகி.

முடிவில், கணவன் ஏற்கனவே பிறிதொன்றில் திருமணமாகி பிள்ளைகளை உடையவன் என்பதை அறிந்ததும் அக்கா மரணத்தைத் தழுவுகின்றாள். அந்நேரத்தில், தண்டிக்கப்பட வேண்டிய கணவன் இருக்கக் கூடியதாக அக்கா தனக்குத் தானே தண்டனையை வழங்கிக்கொண்டதை நினைத்து வாசுகி குமுறுகிறாள்.

உண்மையில், இன்று எமது சமூகத்திற்கு தேவையான ஒரு அத்தியாவசியமான கருத்தை ‘நிர்ப்பந்தங்கள்’ எமக்குச் சொல்கின்றது. மேற்குலகில் வாழும் - எங்கேயோ சிறு பிள்ளையில் கண்ட - ஓர் இளைஞனுக்கு இங்கிருந்து பெண்களை அனுப்பும் பெற்றோர் கவனிக்க வேண்டிய விடயம் இது. பெண்கள் ஏற்றுமதிப் பொருளாகிப் போன அவலத்தை இச்சிறுகதையை படித்த பின்பாவது சிலர் தவிர்த்தால் - தவிர்க்க முயன்றால் அதுவே இச்சிறுகதைக்கு கிடைத்த வெற்றியாகும்.

மற்ற மூன்று சிறுகதைகளும் இந்தியப் படைகள் இந்த மண்ணில் இருந்த போது இந்த மண் சந்தித்த சம்பவங்களை அடித்தளங்களாக கொண்டது.

‘மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள்’

‘இடம் மாறியுள்ள துப்பாக்கிகளால் ..’ ஆகிய சிறுகதைகள் இரண்டும் இந்தியப்படைகள் இங்கிருந்த காலத்தில் அவர்களுடன் ஒட்டியிருந்த தேசவிரோதசக்திகளின் அடாவடித் தனங்களையும், அட்டூழியங்களையும் விளக்குகின்றன இச்சிறுகதைகள் நாம் அனுபவித்த நெஞ்சை உலுக்கும் அந்த நிகழ்வுகளை எம்மில் ஓடவிட்டு எம் உணர்வுகளை கிளறுகின்றன

‘இடம் மாறியுள்ள துப்பாக்கிளால்’ எனும் கதையில வரும் பாக்கியம் அக்கா உண்மையில் இந்த மண்ணில் வாழ்ந்து தேசவிரோதிகளால் அழிக்கப்பட்டதோடு நாட்டுப் பற்றாளர் ஆவார்.

‘மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள்’ கதையில் வரும் சுமதியும் அவளது ஐயாவும் இந்த மண்ணில் ஒவ்வொரு கிராமமும் சந்தித்த மனிதர்கள். இந்தக் கதைகளின் மூலம் எம்மை அந்தக் காலகட்டத்திற்கு கஸ்தூரி இழுத்துச் செல்கிறார். அன்றைய காலத்தில் இந்த மண்பட்ட அவலங்களுக்கு கஸ்தூரியின் இச்சிறுகதைகள் வரலாற்று பதிவுகளாகின்றன

இந்நேரத்தில், ‘‘எங்கள் தேசம் சந்தித்த அந்தச் சோக நிகழ்வுகளிற்கு இங்கு எத்தனை இலக்கியவாதிகள் இலக்கிய வடிவங்களை தந்தனர்கள் அந்த சம்பவங்களை இந்த மண் மறந்து போகத்தான் வேண்டுமா? இந்தியர்களும் - அவர்களின் அடிவருடிகளும் இங்கு இருக்கையில் தான் எழுதவில்லை. வேண்டாம் இப்போது எழுதுவதற்கு என்ன வந்தது? அவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற சிந்தனையா ? உயிர் அழிவற்றது அதனை காலாகாலத்திற்கும் பாதுகாக்க வேண்டும் என்ற எமது இலக்கிய வாதிகளின் தத்துவம் மாறவே மாட்டாதா? என்ற கேள்விகளை எம் நாட்டின் இலக்கியவாதிகளைப் பார்த்து கேட்க வேண்டியது அவசியமாகின்றது.

அதை விடுவோம், கஸ்தூரியின் சிறுகதைகள் நான்கையும் எடுத்துக் கொண்டால் அதில் முதலாவது இ-க்தை

[ 7 ஆம் பக்கம் பார்க்க]

## நவீன அகதிகள்

இழப்புகளுக்கு ஏதுமின்றி
இருப்பதற்கு இடமுமின்றி
அநாதரவற்ற ஜீவன்களை
அகதயென்று
அகராதி சொல்கிறது.
ஆனால்,
அகதி என்ற சொல்லின்
அர்த்தம் புரியாத
இவர்களெல்லாம்
அகதிகளாம்......!

தம் உடைமை இழந்து,
உறவிழந்து,
உயிருக்கு அஞ்சி,
இரவிரவாய் ஓடி வந்து,
ஒதுங்குகின்ற
மனிதரெல்லாம்
அகதியில்லை!

கொழும்பு நகரத்து
மூலை முடுக்கெங்கும்
மலிந்து கிடக்கின்ற
பிரயாண முகவரிடம்
லட்சமாய் பணத்தை
அள்ளி வீசி
வானத்தில்
பறந்து வரும்
சக்தி படைத்திட்ட
இவர்களெல்லாம்
அகதிகளாம்...!

பூமரச் சோலைகளில்,
மதுச்சாலை வாசல்களில்
ரயில் தரிப்பு நிலையங்களில்
ஊர் கதைகள் பேசிப்பேசி
உல்லாச வாழ்வு காணும்
இவர்களெல்லாம்
அகதிகளாம் !

தம் உறவுகளை இழந்து,
உடன் பிறப்புகளை
இழந்து,
தம் உறுப்புகளை இழந்து
பரிதவிக்கும் — அந்த
மக்களெல்லாம்
அகதியில்லை !

‘வெளிநாட்டுச் சாப்பாடும்
விதவிதமாய் உண்டு
நம் நாட்டுச் சாப்பாடும்
நன்றாக உண்டு,
நாட்டு நிலைமைகளாம்
நயமாக உரைத்து
களித்திருக்கும்
இவர்களெல்லாம்
அகதிகளாம்...!

ஆம்,
அகதியென்ற
சொல்லிற்கு
புது அகராதி
படைத்திட
இவர்களெல்லாம்
‘நவீன அகதிகளாம்

- நாகேஷ்

# இந்திய இராணுவத் தலையீடு தமிழீழத்தில் மீண்டும் ஏற்படுமா?

விடுதலைப் புலிகள்மீது விதிக்கப்பட்டுள்ள தடை மீண்டும் இந்திய இராணுவ தலையீட்டிற்கு வழிவகுக்குமா? தமிழீழத்தில் மீண்டும் இந்திய ஆக்கிரமிப்பிற்கான ஒரு சூழ்நிலை ஏற்படுமா? விடுதலைப் புலிகளை அழித்து தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கிவிட பிரேமதாசா அரசு இந்திய இராணுவ உதவியை நாடும் நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படுமா?

இவ்வாறான கேள்விகள் இன்று பரவலாக தமிழீழ மக்கள் மத்தியில் எழுப்பப்படுகின்றன. அத்துடன், புலிகளுக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கை எவ்விதம் தமிழரின் தேசிய பிரச்சினையில் பாதிப்பை ஏற்படுத்தும்? இந்தியாவின் தலையீடு அரசியல் ரீதியான ஒரு தீர்வுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளதா? இப்படியான கேள்விகளும் இன்று தலைதூக்கியுள்ளன.

இந்தக் கேள்விகளுக்கு பதில் தேடும் நோக்கில் ஈழநாதம் பத்திரிகை விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பேச்சாளர் ஒருவரைப் பேட்டி கண்டது. இந்தப் பேட்டியை எமது வாசகர்களுக்குத் தருகின்றோம்.



**கேள்வி;**

இந்தியாவின் தடை குறித்து உங்களது இயக்கத்தின் நிலைப்பாடு என்ன? இந்தத் தடையானது எந்தவகையில் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பாதிக்கும்?

**பதில்:**

இந்தியாவின் தடை குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. இந்தியாவின் உள்நாட்டு அரசியல் நிர்ப்பந்தங்கள், கட்சி அரசியலின் அழுத்தங்கள், தமிழ்நாட்டு பிராமணிய ஆளும் வர்க்கத்தின் அச்சங்கள் இவ்வாறு பல்வேறு காரணிகளின் ஒட்டுமொத்த தூண்டுதல்களினால் இந்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் இந்திய வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சின் உயர்பீட அதிகாரிகளுக்கும் ராஜீவ் அணியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கும் மத்தியில் பலத்த கருத்து முரண்பாடு தோன்றியதும் எமக்குத் தெரியும். எனினும் இறுதியில் காங்கிரஸ் கட்சிக்காரர்களின் அழுத்தத்திற்கு பிரதமர் நரசிம்மராவ் விட்டுக் கொடுப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இந்த உண்மையை நரசிம்மராவும் மறைமுகமாக சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்தியாவின் நீண்டகால பூகோள - அரசியல் நலன்பற்றியோ, வெளியுறவு ராஜதந்திரத்தின் சூட்சுமங்கள் பற்றியோ இந்திய அரசியல்வாதிகள் அக்கறைகொள்வதில்லை. தமது கட்சியின் உடனடி அரசியல் லாபங்கள் பற்றியே அவர்கள் சிந்திப்பதுண்டு. புலிகள் மீது தடைவிதிப்பது இந்திய தேசிய நலனுக்கு அனுகூலமானதல்ல என்பதை இந்திய வெளியுறவு செயலரும் இலங்கை விவகாரத்தில் பழுத்த அனுபவத்தைப் பெற்றவரான திரு. டிக்சிட்டும் மறைமுகமாக சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே டில்லி உயர்மட்டமும் இந்த முடிவு குறித்து மகிழ்ச்சி கொண்டிருக்கிறது எனச் சொல்ல முடியாது. விடுதலைப் புலிகளை தடைசெய்ததன் மூலம் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனையில் இருந்து இந்திய அரசு தன்னைத்தானே அந்நியப்படுத்திக்கொண்டது. அத்துடன் இலங்கைமீதுள்ள ஆதிக்கப் பிடியையும் தளர்த்திக் கொண்டுள்ளது. தமிழர் பிரச்சினை குறித்து தலையீடு செய்யும் தார்மீக ராஜதந்திர அந்தஸ்தையும் இழந்துள்ளது. இதனால் தமிழீழ மக்களின் விவகாரத்தில் உருப்படியான அர்த்தமுள்ள பங்காற்ற முடியாத நிலைக்கும் இந்தியா தள்ளப்பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் மீது தடையை விதித்த போதும் முழு உலகமும் ஏற்றுக்கொள்ளும் ஒரு எதார்த்த உண்மையை இந்தியா மூடிமறைத்துவிட முடியாது. அதாவது புலிகள் இயக்கமானது தமிழீழ மக்களின் பூரண ஆதரவைப் பெற்ற ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பதையும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரேயொரு அரசியல் சக்தி என்பதையும் இந்தியா மறுத்துவிட முடியாது. இந்த எதார்த்தத்தை மறுதலிப்பது போன்று இந்திய அரசு விதித்திருக்கும் தடை புலிகளின் தேசிய அந்தஸ்தையோ சர்வதேச மதிப்பையோ பாதித்துவிடப் போவதில்லை.

இந்திய அரசானது தமிழீழ அரசியல் உலகிலிருந்து தனக்குத்தானே ஒரு தடையை விதித்துள்ளது போல இந் நடவடிக்கை அமைகிறது. எமது தேசியப் பிரச்சினையிலிருந்து இந்தியா அந்நியமாகிக்கொள்வதால் எமது போராட்டத்திற்கு பங்கம் ஏற்படுமென கருதமுடியாது. காலம் காலமாக இந்தியாவின் தலையீடு எமது போராட்டத்திற்கு பெரும் ஆபத்துக்களையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தியது. சுதந்திர தமிழீழம் என்ற இலட்சிய போராட்டத்தை நசுக்கிவிடவும் அந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் எமது இயக்கத்தை அழித்துவிடவும் இந்திய அரசு தீவிர முயற்சிகளை செய்து வந்தது. எனவே இந்தியத் தலையீடு துண்டிக்கப்படுவதும் இலங்கை விவகாரத்தில் இந்தியா அந்நியமாவதும் எமது போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கப் போவதில்லை.

தமிழ்த் தேசியவாதத்தின் ஒரு எழுச்சி வடிவமாக உருப்பெற்றுள்ள விடுதலைப் புலிகளை தடைசெய்வதால் தமிழ்நாட்டின் தேசியவாதத்தை நசுக்கிவிடலாமென தமிழ்நாட்டுப் பிராமணிய ஆளும் வர்க்கம் தப்புக்கணக்கு போடுகிறது. ஆனால் இந்த தடை நடவடிக்கையும் அதனால் எழும் அடக்குமுறையும் தமிழகத்தில் உறங்கிக் கிடக்கும் தமிழனை தட்டி எழுப்பிவிடலாம்.

**கேள்வி:**

தலைவர் பிரபாகரனையும், பொட்டம்மானையும் கைது செய்வது, நாடுகடத்துவது சம்பந்தமாக இந்திய அரசும் சிறிலங்கா அரசும் பரஸ்பரம் வெளியிடும் அறிக்கைகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**பதில்**

எமது தலைவர் பிரபாகரனையும், பொட்டம்மானையும் கைது செய்வதோ, நாடுகடத்துவதோ என்றுமே நடக்கப்போகின்ற காரியமல்ல. இது இந்திய, சிறிலங்கா அரசுகளுக்குத் தெரியாத விடயமல்ல. அப்படியிருந்தும் சந்திரனைப் பார்த்து நாய்கள் குலைப்பது போல டில்லியிலிருந்தும் கொழும்பிலிருந்தும் கையாலாகாதவர்கள் கூக்குரல் எழுப்பி வருகிறார்கள். இதுபற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

தலைவர் பிரபாகரன் ஒரு சாதாரண மனிதர் அல்ல. அவர் ஒரு வரலாற்றுப் புருஷர். தமிழீழ மக்களின் தேசியத் தலைவர். உலகத் தமிழினம் போற்றிப் புகழும் சுதந்திர வீரர். சர்வதேச உலகத்தின் மதிப்பைப் பெற்ற வீர தளபதி. இந்தியமத்திய ஆட்சிப் பீடமும், தமிழக பிராமணிய ஆளும்வர்க்கமும் பிரபாகரனின் பிரபல்யத்தைக் கண்டு அஞ்சுகின்றன. தமிழ் தேசிய எழுச்சியின் புரட்சிச் சின்னமாக உருவகம் பெற்றுள்ள பிரபாகரனின் வளர்ச்சியும் செல்வாக்கும், செத்துக்கொண்டிருக்கும் திராவிட நாகரீகத்திற்கு புத்துயிர் அளித்துவிடலாமெனப் பயப்படுகின்றனர். எனவே, தலைவர் பிரபாகரனின் பெயருக்கும் புகழுக்கும் மாசு கற்பிக்கும் நோக்கில் மிகவும் கீழ்த்தரமான முறையில் இந்தியவில் விசமப்பிரசாரம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. ஒரு சாதாரண கொலைக் குற்றவாளியாக, பயங்கரவாதியாக பிரபாகரனை சித்தரித்துக்காட்டி தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிட வேண்டும் என இந்திய ஆளும் வர்க்கம் திட்டமிட்டு செயற்படுகிறது. இந்த தந்திரோபாயத்தின் அடிப்படையில்தான் பிரபாகரன் மீது பிடி ஆணைகள் அனுப்பப்படுகின்றன. இந்தப் பிடி ஆணைகளால் எதையும் சாதிக்கமுடியாது என்பது இந்தியாவுக்கு தெரியாததல்ல. ஆயினும், பிரபாகரனின் பெயருக்கு களங்கத்தையாவது ஏற்படுத்திவிடலாமென டில்லி ஆட்சியாளர்கள் நம்புகிறார்கள் போலும்.

**கேள்வி**

தமிழீழத்தில் மீண்டும் இந்திய இராணுவத் தலையீடு ஏற்படுவதற்கான சூழ்நிலை பிறக்குமா?

**பதில்**

மீண்டும் தமிழீழத்தில் இந்திய இராணுவத் தலையீடு ஏற்படுமென நாம் நினைக்கவில்லை. தமிழர் பிரச்சினையில் மீண்டும் இராணுவ ரீதியாக தலையிடுவதை இந்தியாவும் விரும்பப்போவதில்லை. பிரேமதாசா அரசும் அனுமதிக்கப்போவதில்லை. சென்ற தடவை, இருநாடுகள் மத்தியிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறிலங்கா ஜனாதிபதியின் அழைப்புடன் உலக வல்லரசுகளின் ஆசீர்வாதத்துடன் அமைதிகாக்கும் பணி என்ற போர்வையுடன் இந்திய இராணுவம் தமிழ் மண்ணில் காலூன்றியது.

இந்த தலையீடு ஒரு நீண்ட கொடூரமான யுத்தமாக விரிவாக்கமகண்டு, இந்திய இராணுவ கௌரவத்திற்கு பெரும் இழுக்கைத் தேடிக்கொடுத்து. இறுதியில் அசிங்கப்பட்டு அவமானப்பட்டு இந்திய இராணுவம் இங்கிருந்து வெளியேறியது. உலகத்தின் மிகப்பெரிய இராணுவம் ஒரு சிறிய பிரதேசத்தில ஒரு தனி மனிதனை வெற்றிகொள்ள முடியாது திரும்பிய நிகழ்வானது வெளிவிவகார வரலாற்றில் இந்தியா என்றும் சந்தித்திராத மிகப்பெரிய அவமானமாகும். இந்த உண்மையை முந்திய இந்திய இராணுவ தளபதிகளே ஒப்புக்கொள்கிறார்கள். இந்த சூழ்நிலையில் மீண்டும் அதே காரணத்திற்காக ஒரு பெரும் படையெடுப்பை நிகழ்த்துவதற்கு இந்தியா துணியப்போவதில்லை. அதுவும் ஒப்பந்த நிர்ப்பந்தம் இன்றி சிறிலங்கா அரசின் அனுசரணையின்றி, உலகத்தின் ஆசீர்வாதம் இன்றி மீண்டும் ஒரு அர்த்தமற்ற யுத்தத்தில் இந்தியா குதிப்பதற்குச் சாத்தியமில்லை. அத்துடன் வட எல்லைப் பிராந்தியத்தில் இந்தியா நெருக்கடி நிலைமையைச் சந்தித்து நிற்கிறது. இந்திய பாகிஸ்தான் கெடுபிடி யுத்தம் தீவிரமடைந்து வருவதுடன், கஷ்மீர், பஞ்சாப் உள்நாட்டுப் போரிலும் இந்தியப் படையணிகள் சிக்குப்பட்டு நிற்கின்றன. இவற்றிற்கும் மேலாக பிரேமதாசா அரசு இந்தியத் தலையீட்டை விரும்பவில்லை. இந்திய இராணுவத்தை வெளியேற்றியதைப் பெருமிதம்கொள்ளும் பிரேமதாசா மீண்டும் இந்திய இராணுவத்தை வரவழைப்பது அவரது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானதாகும். அத்துடன் அமெரிக்காவின் தலைமையிலான இன்றைய புதிய உலக ஒழுங்கமைப்பில் பிரதேச வல்லரசுகளின் விரிவாக்க நடவடிக்கைகள் வரவேற்கப்படாது.

ஒட்டுமொத்தத்தில் தமிழீழத்தில் மீண்டும் இந்திய இராணுவ தலையீடு இடம்பெறுவதற்கு சாத்தியமே இல்லை. இதுகுறித்து எமது மக்கள் வீணாகக் கலவரமடையக் கூடாது.

**கேள்வி:**

புலிகள்மீது இந்தியா விதித்துள்ள தடை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக அமையுமா?

**பதில் :**

இது சிறிலங்கா அரசாங்கத்தின் அணுகுமுறையைப் பொறுத்திருக்கிறது. இந்தியாவின் ராஜதந்திர அழுத்தங்களுக்கு விட்டுக்கொடாமல் பிரேமதாசா அரசு தன்னிச்சையாக துணிந்து தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளுமானால் இந்தியாவின் தடை ஒரு முட்டுக்கட்டையாக அமையப்போவதில்லை.

பிரேமதாசா அரசை பலவீனப்படுத்தி ஒரு நெருக்கடி நிலைக்குள் தொடர்ந்து வைத்திருப்பதையே இந்தியா விரும்புகிறது. எனவே புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியில் சமரசம் ஏற்படுவதையும் சமாதானப் பேச்சுக்கள் நிகழ்வதையும் இந்தியா விரும்பவில்லை. பழைய ராஜீவ்—ஜே ஆர் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுவதையும், அதன் அடிப்படையில் ஒரு தீர்வு ஏற்படுவதையும், புலிகள் ஒதுக்கப்பட்டு இந்திய சார்பு குழுக்கள் முதன்மைப்படுவதையும், இந்திய ஆதிக்கத்தின் கீழ் சிறிலங்கா சிறைப்பட்டுக் கிடப்பதையுமே இந்தியா விரும்புகிறது. எதார்த்த அரசியல் நிலைமைக்குப் புறம்பான தனது குறிக்கோள்களை அடைவதற்கு இந்தியா தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும். பிரேமதாசா அரசுக்கு ராஜதந்திர பொருளாதார அழுத்தங்களை போடுவதற்கு முயற்சிக்கும். பிரேமதாசா அரசைக் கவிழ்த்து, தனது அடிவருடிகள் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கும் நாசவேலைகளில் ஈடுபடும்.

இந்த அழுத்தங்களை எல்லாம் பிரேமதாசா அரசு எப்படி முகம் கொடுக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். குறுகிய அரசியல் லாபத்தையும், சந்தர்ப்பவாதத்தையும் நோக்காகக் கொண்டு சிங்கள-பௌத்த பேரினவாதிகளும், தமிழ்த் துரோகக் கும்பல்களும் இந்தியாவின் பொறிக்கிடங்கில் விழுந்து விடுவது சாத்தியம். இதனால் இனப்பிரச்சினை மேலும் சிக்கலடையலாம். பிரேமதாசா அரசும் மேலும் நெருக்கடிக்குள் சிக்கித் திணறலாம்.

ஆனால் தமிழீழ மக்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போவது தமிழீழ மக்களே அன்றி. இந்திய அரசோ அல்லது சிங்கள அரசியல்வாதிகளோ அல்ல.

# காமதேனு குளிர்பான நிலையம்



கிளி. நகரில் புதிய பெருகுடன் உங்களை அழைக்கிறது

"காமதேனு குளிர்பான நிலையம்"

★ ஸ்பெசல் கிறீம், புறூட் ஐஸ் கிறீம், சொக்கலட் நட்ஸ், சொக் கலட் கிறீம், ஸ்ரோபெரி கிறீம், ஐஸ்கோப்பி, பசன் யூஸ், ஒரேஞ்ஜ்யூஸ், பிளேன் சர்பத், கிறீம் சர்பத், அர்ச்சயா குளிர்சோடா மற்றும் நாவுக்குச் சுவையான சிற்றுண்டி வகைகள்.

★ தங்களது இல்லங்களிலும், பொது இடங்களிலும் நடக்கும் வைபவங்களுக்குத் தேவையான உணவு வகைகளையும் குறித்த தவணையில். சிறந்தமுறையில் தயாரித்து, விருந்துபசார ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

குறிப்பு;- சம்பந்தப்பட்ட இடத்திற்குக் கொண்டு சென்று வழங்கும் சேவையும் உண்டு.

★ பிறந்தநாள் விழா, திருமண விழாக்களுக்கான ஐசிங் கேக் வகைகள் மற்றும் உணவு வகைகளும் தேவைக்கேற்ற அளவுகளில். குறித்த தவணையில், சிறந்த முறையில், மலிவு விலையில் தயாரித்துக் கொடுக்கப்படும்.

விசேடமான முறையில் ஐஸ்கிறீம் வகைகள் பொதி செய்து தூர இடங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய முறையில் தயாரிக்கப்படுகின்றது.

வாருங்கள் சுவை தேடுங்கள்
களி - கூருங்கள்

## காமதேனு குளிர்பான நிலையம்

யாழ். வீதி, கிளிநொச்சி.

[2596]


## உற்சவம் ஆரம்பம்

இணுவில் அருள்மிகு ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது அடுத்த மாதம் 5ஆம் திகதி பூங்காவனத்துடன் முடிவடையும் இம்மகோற்சவ காலத்தில் அகில இலங்கை கம்பன் சமூக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தெய்வீக அருட்பேருரை நிகழ்த்துவார்.

எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 4ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (24)

## மடு அகதி முகாமில் தண்ணீர்பற்றாக்குறை

மடுத்திருப்பதி அகதி முகாமில் தண்ணீர் பற்றாக்குறையும், சுகாதாரச்சீர் கேடும் நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

பல்லாயிரக் கணக்கான அகதி மக்கள் வாழும் இந்த அகதி முகாமில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடும் நிலவுகிறது.

பல அகதிகள் நோய் வாய்ப்பட்ட நிலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

அகதி மக்கள் தங்கியுள்ள குடிசைகள் பல சீர்குலைந்துள்ளன. இந்தக்குடிசைகளைச் சீர் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அகதிமுகாமின் சில புறங்களில் துர்நாற்றம் வீசுகின்றது.

## 40 இலட்சம் ரூபா போதைப் பொருளுடன் கைது

நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்களுடன் ஏழு தமிழ் இளைஞர்கள் இத்தாலியில் கைது செய்யப்பட்டிருப்பதாக ரோம் நகரப் பொலிசார் கூறியுள்ளனர் என நேற்றைய தினயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-07-17 வரை

விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

உடலமைப்பியலில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 /விரிவுரையாளர் உதவி விரிவுரையாளர் சம்பள அளவுத் திட்டம்

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 :

ரூபா 80,000 - 5X250 - 9,250/-மாதமொன்றுக்கு

விரிவுரையாளர் (மருத்துவம்) :

ரூபா 4 500 - 10X200 - 6 500/-மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்குமுதல் நியமனத்தின்போதுமேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் இரண்டு படி அதிகமாக வழங்கப்படல் வேண்டும். அதாவது 4, 900/- சம்பளத்தில் வைக்கப்படல்வேண்டும்.)

உதவி விரிவுரையாளர்:

ரூபா 3 900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டிற்கு. ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணை வேந்தர் ரூபா 4, 500 - 10X200 - 6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் 4 500/- சம்பளப் படியில்வைப்பார்.

1. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 X 10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல்வேண்டும்

3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள். நியதிச் சட்டசபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்

5. தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992 - 05 - 25

(சி/ 4472)


# தமிழகம் விற்பனை நிலையம், நெல்லியடி

# ஓராண்டு நிறைவு விழா 29-05-1992

★ தரமான பொருட்கள் ★ நியாயமான விலையில்



வாங்கக் கூடிய ஒரே ஸ்தாபனம்

## தமிழகம் விற்பனை நிலையம், நெல்லியடி

நம்பிக்கை, நாணயம், வாடிக்கையாளர்களின் திருப்தி

இவையே எமது முதலீடு

எமது கிளை நிலையங்கள் பின்வரும் இடங்களில் அமைந்திருக்கின்றன;

1. நெல்லியடி 2. பருத்தித்துறை 3. உடுப்பிட்டி
4. எமது புதிய தொரு கிளை

வெகுவிரைவில் அச்சுவேலியில் அமைய இருக்கிறது.

எமது வாடிக்கையாளர்களுக்கு
தமிழகம் விற்பனை நிலையத்தினராகிய நாம் இவ் ஓர் ஆண்டு பூர்த்தி அடையும் இந்நாளில் எமது நல்லெண்ணத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகம் விற்பனை நிலையம்
நெல்லியடி

(2598)

# ஜே. ஆர். யாருடைய பக்கம்?

ஜே. ஆர். உங்களிற்கு எதிராக டட்லியுடன் நின்றவர். அவர் சேனநாயக்க குடும்பத்தின் விசுவாசி எனவே அவருக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டாம் என 1953-ல் சேர் ஜோன் கொத்தலாவலயிடம் அவரது நண்பர்கள் வற்புறுத்தினர். இவ்விடத்தில் ஜே ஆர். பற்றி சேர் ஜோன் கொத்தலாவல எத்தகைய மதிப்பீட்டைக் கொண்டிருந்தார் என்பதையும் ஜே.ஆர். ஐ எப்படிப் பயன்படுத்த எண்ணினார் என்பதையும் விளக்குவதே இக்கட்டுரை ஆகும்.

1952 இல் டி. எஸ். சேனநாயக்க விபத்துமரணத்துக்குஉள்ளானதும் அடுத்த பிரதமர்பதவி தனக்கே என ஜோன் கொத்தலாவல பூரணமாக எதிர்பார்த்தார். மகாதேசாதிபதியிடம் இருந்து அதற்கான அழைப்பு வரும் எனக் காத்திருந்தார். டி. எஸ். மரணமடைந்த காலத்தில் இலங்கைக்கான மகாதேசாதிபதியாக இருந்தவர் சோல்பரி பிரபு. அவர் அக்காலத்தில் மூன்று மாத விடுமுறையில் இங்கிலாந்து சென்றிருந்தார். டி. எஸ். இன் மரணச் செய்தியைக் கேள்விப்பட்டதும் புதிய பிரதமரைத் தான் வரும்வரை நியமிக்க வேண்டாம் என அப்போது இங்கிருந்த பதில் தேசாதிபதிக்கு அறிவித்து விட்டு தனது விடுமுறையை ரத்துச் செய்த சோல்பரி பிரபு இலங்கை வந்து சேர்ந்தார். அன்றைய காலத்தில் டி. எஸ். இற்கு அடுத்ததாகக் கட்சியின் மூத்த உறுப்பினர். ஜோன் கொத்தலாவல, இவருக்கு அடுத்தவர் ஜே. ஆர். அவருக்கும் அடுத்ததாகவே டட்லி இருந்தார். ஆனால் டி. எஸ். மரணமடைய முன்பு சோல்பரியுடன் கதைத்து வைத்திருந்ததன் பிரகாரம் - தான் இல்லாத இடத்தில் யு. என். பி. யின் தலைமைத்துவம் டட்லிக்குத்தான் சேர வேண்டும் என்று - சோல்பரி டட்லியைப் பிரதமராக்கினார்.

பிரதமர் பதவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கொத்தலாவலைக்கு இது அதிர்ச்சியையும், சினத்தையும் ஏற்படுத்தியது. அவர் சேனநாயக்க குடும்பத்தின் மீது வெறுப்புக் கொண்டார். சேனநாயக்க குடும்பத்திற்கு எதிரான கருத்துக்களை வெளிப்படையாகவே கூறலானார். சேனநாயக்க குடும்பத்தைக் கண்டித்து எழுதியவரின் பெயரிடப்படாத ஒரு கைந்நூலை வெளியிட்டார். இப்பிரச்சினையில் ஜே ஆர் டட்லியுடன் சேர்ந்து நின்றார். ஜே ஆரிற்கு டட்லி முக்கிய அமைச்சர் பதவி தந்தார் அத்துடன் அவரைத் தமது பிரதான அரசியல் சகாவாகவும், ஆலோசகராகவும் வைத்திருந்தார். அன்றிலிருந்த சூழலில் நிதி அமைச்சு ஒரு முக்கிய பதவியாக இருந்தது. இப்பதவி ஜே. ஆர். இற்குத் தரப்பட்டது. 1953 இல் ஒரு பெரிய ஹர்த்தால் இலங்கையில் அனுஷ்டிக்கப்பட்டது. அச்சூழலில டட்லி அரசை நடத்த முடியாது தன் பதவியைத் துறந்தார். இக்கட்டத்தில் மாற்று வழியின்றிக் கொத்தலாவலை அரசமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். கொத்தலாவலை யூ. என். பிக்குத் தலைமை தாங்கி புதிய மந்திரி சபையை அமைத்தார். இக்கட்டத்தில் அவர் ஜே. ஆர். இற்கு முக்கிய அமைச்சைத் தரத் தீர்மானித்தார். நிதி அமைச்சு பதவியை தொடர்ந்தும் ஜே. ஆரிடம் விட அவர் தீர்மானித்தார். ஆனால் அப்போது கொத்தலாவலையின் நண்பர்கள் ஜே. ஆரிற்கு அவ்வாறானதொரு பதவி கொடுக்கவேண்டாம் என்றும் அவரை அரசாங்கத்திற்கு வெளியில் விடுமாறும், அவர் கொத்தலாவலையின் எதிரி என்றும் கூறினார்கள். அப்போது நண்பர்

**மு.திருநாவுக்கரசு**

களிடம் கொத்தலாவல 'நீங்கள் டிக்கியைப் பற்றி பிழையாக விளங்கி வைத்திருக்கிறீர்கள் (ஜே. ஆரிற்கு 'டிக்கி' என்றொரு பெயர் உண்டு. ஜே. ஆரின் முதிர்ந்த நண்பர்களும் முதிர்ந்த அரசியல் வாதிகளும் இன்றுவரை அவரை டிக்கி என்றே அழைக்கிறார்கள்) டிக்கி டட்லியின் ஆளோ அல்லது சேனநாயக்ககுடும்பத்தின் விசுவாசியும் அல்ல என்னைப்போலவே சேனநாயக்க குடும்பத்தால் பாதிக்கப்பட்டவர்களின் டிக்கியும் ஒருவர். கட்சியில் எனக்கடுத்த நிலையில் இருந்த சிரேஷ்ட தலைவரும் அவர்தான். என்னைப் புறக்கணித்ததுபோல அவரும் புறக்கணிக்கப்பட்டு டட்லி பிரதமரானார். எனவே டிக்கிக்கு சேனநாயக்க குடும்பத்தில் எந்த விசுவாசமும் இல்லை. ஆனால் அவர் அரசமைக்கக் கூடியவரின் பக்கம் நின்றார். அந்த நேரம் நான் அரசமைத்திருந்தால் அவர் டட்லிக்குத் துணையாக இருந்தது போலவே எனக்கும் துணையாக இருந்திருப்பார். இதில் டிக்கி தனது நிலையைப் பாதுகாக்கக் கூடிய ஒரு இடத்தைத் தேடினாரே தவிர என்னை எதிர்க்க வேண்டும் என்ற நிலைப்பாடு அவரிடம் இருக்கவில்லை. இப்போது நான் மந்திரி சபை அமைக்கும் கட்டத்தில் அவர் எனக்கு விசுவாசமாகச் செயற்படுவார். நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது டிக்கியின் மூளை யு. என். பிக்கும் அரசாங்கத்திற்கும் தேவை' என்ற பொருள்பட அவர் விளக்கினார்.

ஆயினும் தனது விசுவாசிகளான நண்பர்களின் வற்புறுத்தலை கொத்தலாவல முற்றாக நிராகரிக்க முடியாதவரானார். ஒருபுறம் ஜே ஆர். ஐ நிராகரிக்க முடியாமலும், மறுபுறமும் அவரிற்கு உயர்ந்த பதவி தரவும் முடியாது என்ற இக்கட்டான நிலையில் அவரிற்கு நிதி அமைச்சைத்தராமல் உணவு அமைச்சைத் தந்தார்.

கொத்தலாவலை எதிர்பார்த்தது போலவே ஜே ஆர் கொத்தலாவலைக்கு விசுவாசமாக இருந்தார் பல்வேறு கட்டங்களிலும் அவர் கொத்தலாவலைக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினார் இவ்விடயத்தில் கொத்தலாவலையின் மதிப்பீடு சரியானது என்பதை கொத்தலாவலையின் நண்பர்கள் பின்னர் உணர்ந்து கொண்டனர்.

இதே போல ஒலிவர் குணதிலகவை மகாதேசாதிபதியாக நியமிக்க கொத்தலாவல தீர்மானித்தபோது பலர் வேறு சில காரணங்களிற்காக அவரை அப்பதவியில் அமர்த்த வேண்டாம் என கொத்தலாவலையிடம் கேட்டனர். சேனநாயக்க குடும்பத்திற்கு ஆதரவாக இருந்த சோல்பரியைப் பழிவாங்கவே சோல்பரியை அகற்றிவிட்டு அப்பதவிக்கு ஒலிவரை நியமித்தார். 1958 இல் கலவரம் உண்டான காலத்தில் இலங்கையின் மகாதேசாதிபதியாக ஒலிவர் இருந்தார். அக்கலபரம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் தமிழரைச் சிங்களவர் பதம் பார்க்கட்டும்'' என்று தனது அபகீர்த்திமிக்க வார்த்தைகளை கூறிய அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்க கலவரத்தை அடக்க முற்படாதபோது இறுதியில் ஒலிவர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற பின்னரே கலவரம் கட்டுப்படுத்தப் பட்டது இவ்வாறு ஒலிவர் கலவரத்தை அடக்கிய பின்பு சில தாராண்மைத் தன்மை மிக்கபத்திரிகையாளர்கள்கொத்தலாவல,ஒலிவரை தேசாதிபதியாக நியமித்தமை ஒரு சரியான மதிப்பீடு என வர்ணித்தனர்.

கொத்தலாவலையின் எல்லா நடவடிக்கைகளையும் நியாயப்படுத்துவதல்ல இக்கட்டுரை முறையின் நோக்கம் ஆனால் ஜே ஆர் பற்றியும் கொத்தலாவலை கொண்டிருந்தமதிப்பீட்டை இன்றுநினைவு கூர்வதின்மூலம், குறிப்பாக ஜே ஆரின் பிற்கால அரசியலை விளங்கிக்கொள்வது சுலபமானதாக உள்ளது.

## மணலாறு கொத்தணியில் புதிய பாடசாலை ஆரம்பம்

மணலாறு மாவட்டக் கொத்தணிப் பிரிவில் ஓர் பாடசாலை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மு/உடப்புக்குளம் தமிழ் வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்ட இப் பாடசாலை, கடந்த 20-05-92 ஆம் திகதி புதன் கிழமை மு.ப. 11 30 மணியளவில் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ விசாகலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று உதவி ஆணையாளர் திரு. மோகன்தாஸ் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார்.

உடப்புக்குளம் கிராம மக்களின்வேண்டுகோளுக்கிணங்க அளம்பில் கொத்தணி அதிபரும் முல்லைத்தீவு பிரதேசக் கல்விப்பணிப்பாளரும் மேற்கொண்ட அயராமுயற்சியால் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது ஆரம்ப தினத்தன்றே 120 மாணவர்கள் சேர்ந்து கொண்டார்.

## பொறியியலாளர் பரீட்சை

வகுப்பு இரண்டு பொறியியலாளர் பதவிக்கு அமர்த்தும் பரீட்சை நாளை 30-ம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் தமது அனுமதி அட்டைகளைக் கொழும்பிலுள்ள பரீட்சை ஆணையாளர் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளும்படி பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. [24]

## கஸ்தூரியின்

மூன்றாவது சிறுகதையான 'அவர்களுக்குத் தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே ......' என்ற சிறுகதை தட்டிச் செல்கின்றது.

இந்தியர்களுடன் போர் தொடங்கிய நாட்களில் ஒரு நாள் அவர்களின் கொடூரமான டாங்கிகளும் எறிகணைகளும் எங்கள் கிராமம் ஒன்றை சிதைத்த சம்பவமே இதன் அடித்தளம்.ஒரு தாய், மகளும் மகனும் அந்த அமைதியான குடும்பம் அழிபட்டுப் போகிறது தன் சாவை அணைக்கும் வரை அந்தத் தாயின் உணர்வலைகளை மிக உருக்கமாக வடித்திருக்கிறார் கஸ்தூரி. இந்நூலைப் படிப்பவர்களின் இதயங்களை இச்சிறுகதை அசைக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் தேவையற்றது. இறுதியாக காலத்தின் தேவைகருதி எழுதப்பட்ட ஒரு கடிதத்துடன் இந்நூல் நிறைவு பெறுகின்றது. இந்நூலை நாம் படித்து முடிக்கும் போது இந்த மண் இழந்த போன இந்த கலைஞரின் இழப்பிற்காக எங்கள் இதயங்கள் கனக்கின்றன

## வெளிவாரி கற்கை நெறியில் சைவ சித்தாந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக வெளிவாரிக் கற்கை நெறியில் சைவ சித்தாந்தத்தில் சிறப்புக் கலை மாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது

முதற் கலைத் தேர்வில் மெய்யியல் பாடத்தில் சிறப்புச் சித்தியடைந்தவர்களும், பல்கலைக் கழகப் பட்டதாரித் தகுதியுடையவர்கள் எவரும் சைவ சித்தாந்தத்தில் சிறப்புக் கலை மாணி படிப்பைத் தொடர யாழ். பல்கலைக் கழக மெய்யியல் பிரிவில் அனுமதிக்கப்படுவார்கள்

மேலும், விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளைச் சார்ந்த பட்டதாரிகளும் சிறப்புக் கலைமாணிப் பட்டப் படிப்பிற்காகத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று பல்கலைக் கழக வட்டாரங்கள் கூறுகின்றன.

## மெய் வல்லுநர் போட்டி

(குருநகர்)

மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகத்தினால்நடத்தப்படும் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும், நாளை 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வைபவத்திற்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.ச இரத்தினராசா தலைமை வகிப்பார்.

## அகழ்வு ஆய்வுகள் குறித்து அஸ்கிரியபீடாதிபதி அச்சம்

(கண்டி)

பொலநறுவையில் தெமிழ மகா சேயா என்றழைக்கப்படும் பாரிய தமிழ் டகோபாவில் கடந்த எட்டு வருடங்களாகக் கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவந்த தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் திடீரென்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன,இந்த டகோபா பராக்கிரமபாகு மன்னரால் கட்டப்பட்டது குறிப்பிடத் தக்கது.

மேற்படி தமிழ் டகோபாவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி வேலைகளை உடன்நிறுத்துமாறு கலாசார அமைச்சர்ஜே.எம்.லொக்குபண்டாரா உத்தரவிட்டுள்ளார்.இந்த டகோபா இலங்கையில் உள்ள பாரிய டகோப்பாக்களில் ஒன்றாகும்.

அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிப்பான சிறி சந்தானந்த தேரோ தெரிவித்த ஆட்சேபத்தின் பேரிலேயே அகழ்வாராய்ச்சி வேலைகள் கைவிடப்பட்டன.

கலாசார முக்கோணத்திட்டப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி றோலஸ்ட் சில்வாவும், பிரதிப் பணிப்பாளர் பேராசிரியர் பி.எல்.பிரேமதிலக்காவும் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்தபோது ஆட்சேபனைக்கு ஆதரவாக அவர் தெரிவித்த கருத்துகள் விசித்திரமானவை.

அஸ்கிரிய பீடாதிபதி என்ற முறையில் பொலநறுவை எனது இறைமாவட்டத்துக்குட்பட்டது ஆனால் பொலநறுவையில் 1984 முதல் இடம்பெறும் அகழ்வாராய்ச்சி மற்றும் புனரமைப்புகள் வேலைகள் பற்றி எனக்கொன்றும் தெரியப்படுத்தப்படவில்லை. மேலும், இந்தப் புனரமைப்பு வேலைகளில் பெரும் ஒழுங்கீனங்கள் இருப்பதாகக் கூறும் பீடாதிபதி, இது சூழலில் இயற்கைத் தன்மையையும் கெடுப்பதாகக் கூறுகிறார்.

கலாசார முக்கோண திட்டத்துடன் சம்பந்தமில்லாத புத்திஜீவிகள் குழுஒன்று இந்த அகழ்வாராய்ச்சி வேலைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறும் அவர் குழு உறுப்பினர்களின் பெயர்களையும் வெளியிட்டுள்ளார்.

அஸ்கிரிய பீடாதிபதி வண.பலிப்பானசிறி சந்தானந்த தேரோவின் திட்டத்தில் உள்நோக்கம் இருப்பதாக பக்கசார்பற்ற தொல்பொருளியலாளர் கூறுகின்றனர்.

## சகோதரரின் மரணச் சடங்கு; உடுகம்பொல சென்றார்?

[காலி]

அரசியல் சர்ச்சைக்குள்ளாகியுள்ள முன்னாள் டி.ஐ.ஜி பிரேமதாஸ உடுகம்பொல கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 3. 30 மணியாளவில் காலியில், தனது சகோதரரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிசாரால் தேடப்பட்டு வரும் இவர் அவர்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு தனது சகோதரரான காலி மோதல பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரான மறைந்த முனிதாஸா உடுகம்பொலவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த அவரது வீட்டுக்கு வந்து சில நிமிட நேரம் இருந்து அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தி விட்டுச் சென்றார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவருடன் அவரது மெய்ப் பாதுகாப்பாளர் ஆறுபேரும் அங்கு காணப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

முனிதாஸா உடுகம்பொல கடந்த வியாழன் மாரடைப்பால் காலமானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உற்சவம் பற்றி அறிந்தும் ராணுவம் தாக்குதல் நடத்தியது

## வற்றாப்பளை ஆலய பரிபாலனசபை அறிக்கை

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் உற்சவம் பற்றி தாம் சிறிலங்கா இராணுவத்தினருக்குமுன்கூட்டியே அறிவித்திருந்ததாக மேற்படி ஆலய பரிபாலனசபை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேற்படி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற இராணுவ எறிகணை வீச்சில் இதுவரை 23 பேர் பலியானதும் பலர் படுகாயமடைந்ததும் இக்கொடூரச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள சிறிலங்கா அரசு ஜயலத் விசாரணைக் குழுவொன்றை நியமித்திருப்பதும் தெரிந்ததே.

மேற்படி விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காகவே மேற்படி அறிக்கையினைத் தயாரித்து அதில் கோயில் குருக்கள், பரிபாலனசபை அங்கத்தவர்கள். முக்கியஸ்தர்கள் அதில் கையொப்பமிட்டுள்ளனர்

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது நாலாவது எறிகணை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தருகில் வீழ்ந்து வெடித்ததும் பலர் அபயக்குரல் எழுப்பியவாறு சரிந்து வீழ்ந்தனர். குழந்தைகளை ஏந்திய தாய்மார், பொங்கல் பானையுடன் வந்தவர்கள், காவடி எடுத்த கோலத்துடன் இருந்தவர்கள் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் ஆகியோர் உட்பட பலதரப்பட்டவர்களும் பாதிக்கப்பட்டார்கள். இந்தச் சம்பவத்தில் 25 ஆம் திகதிவரை இறந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆகும்.

இந்த உண்மை நிலைமையைப் புரிந்து கொண்டு நீதியும் நியாயமும் கிடைக்க சகல வகையிலும் உதவுமாறு சகல சமய ஸ்தாபனங்களையும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களையும் அரசியல் வாதிகளையும் மற்றும் வெளிநாட்டு சர்வதேச ஸ்தாபனங்களையும் பணிவோடு கேட்டுக் கொள்கின்றோம்.

இச் சம்பவம் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரில் பார்வையிடவும் சம்பந்தப்பட்டவர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் விசாரணைக்காக அழைக்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நிவாரண உதவி கிடைக்க வழி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

## விசாரணைக்குழு முன் ஐவர் சாட்சியம்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் மீது கடந்த 18 ஆம் திகதி சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள ஜயலத் குழுவினர்முன் சாட்சியமளிக்க முல்லைத்தீவிலிருந்த ஐந்துபேர் சென்றனர்.

வவுனியா கச்சேரியில் துரித செயல்பாட்டு அலுவலகத்தில் கடந்த 26 ஆம் திகதி விசாரணை ஆரம்பமானது மேற்படி ஆலய பரிபாலனசபையின் முக்கிய உறுப்பினர்கள், ஆலய குருக்கள், சம்பவதினம் காயமடைந்தவர்களில் ஒருவர் அந்தப்பகுதி கிராமசேவகர் ஆகியோரே சாட்சியமளிக்க சென்றவர்களாவர்.

## வற்றாப்பளை சம்பவம் இடைக்கால அறிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு அம்மன் கோயிலுக்கு அருகில் நடைபெற்ற மோட்டார் ஷெல் தாக்குதல் பற்றிய இடைக்கால அறிக்கையை ஜயலத் விசாரணைக்குழு சமர்ப்பித்துள்ளது.

கோயிலில் வருடாந்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் 200 பேர் கொண்ட விடுதலைப் புலிகளின் குழுவொன்று அந்தப் பகுதியில் கூடியிருந்ததை இராணுவத்தினர் அவதானித்தனர். இவர்களை நோக்கி நாலு மோட்டார் ஷெல்கள் சுடப்பட்டன. கோயில்களின் மீது இராணுவத்தினர் ஒரு போதும் ஷெல் தாக்குதல் நடாத்தவில்லை என வீரக்கோன் தெரிவித்தார்.

ஒரு மோட்டார் ஷெல் விழுந்த போது கோயில் பகுதியில் நின்ற சில யாத்திரிகர்கள் அதற்கு இலக்கானார்கள். யாத்திரிகர்களுடன் கலந்திருந்த புலிகள் உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டார். கோயிலிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. இறுதி அறிக்கை பின்னர் வெளியிடப்படும்.

## அழிஞ்சிப்பத்தான சம்பவம் விசாரணைக் குழு அறிக்கை

அழிஞ்சிப்பத்தான படுகொலைச் சம்பவம் பற்றி விசாரிக்கவென நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குழு, அதன் அறிக்கையைப் பாதுகாப்பு அமைச்சிடமும் ஜனாதிபதி அலுவலகத்திலும் சமர்ப்பித்திருப்பதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

இந்த அறிக்கையினைப் பற்றி குறிப்பிட்டஅவர் சுமார் 400பேர் கொண்ட விடுதலைப் புலிகள் இயக்க குழுவொன்று கரபொல, முத்துகல, வெலிக்கந்த ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிலரின் உதவியோடு கடந்த மாதம் 29 ஆம் திகதி அழிஞ்சிப்பொத்தான பொலிஸ் காவல் நிலையத்தை முறியடித்து பலரை வெட்டிக் கொலை செய்துள்ளார்கள்.

பின்னர் 29 ஆம் திகதி அதிகாலை சில முஸ்லிம் ஊர் காவல் படையினர் பலகிராமவாசிகளின்உதவியோடு முத்துகல கிராமத்தைத்தாக்கியுள்ளனர். கரடபொல பொலிஸ் காவல் நிலையத்தில் இருந்த பொலிசார் ஆகாயத்தை நோக்கி சில தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆயினும் இதனால் பலன் ஏதும் ஏற்படவில்லை.

பழிவாங்கும் நடவடிக்கையாக இத்தாக்குதல்கள் நடைபெற்றதாக குழு அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. தாக்குதலுக்குப் பொறுப்பான சில நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

### மணலாறில

நிமிடம் மட்டுமே நிகழ்த்தப்பட்டது.

இத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன்ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன, இத தாக்குதலில் போராளிகள் தரப்பில் சேதம் எதுவு இல்லை.

இத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின்விபரம்,

| | |
|---|---|
| ★ ரி-56 1 ரகதுப்பாக்கி | -01 |
| ★ ரி-56-2 ரகதுப்பாக்கி | -01 |
| ★ ரி-56 மகசின் | -07 |
| ★ ஏ கே. மேகசின் | -01 |
| ★ நடுத்தர ரவைகள் | -1033 |
| ★ ஜே ஆர் கைக்குண்டு | -5 |
| ★ கிளைமோர் | -3 |
| ★ மழைகாப்பு அங்கி | -3 |
| ★ வயர் ரோல் | -1 |
| ★ தலைக்கவசம் | -3 |
| ★ சப்பாத்து சோடி | -04 |

### முல்லைத்தீவில

குதல் 45 நிமிடங்கள் இடம் பெற்றது

இப்பொழுது சண்டை நடந்த இடத்தல் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

இதேவேளை சண்டை நடந்த இடத்தில் தொடர்ந்து இரண்டு அவ்ரோ, இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், இரண்டு உலங்கு வானூர்திகள் என்பன மாறி மாறித் தாக்குதல்களைமேற்கொண்டு வருகின்றன அதுவே இராணுவ முகாமிலிருந்து எறிகணை வீச்சும் நடாத்தப்படுகிறது

இம்மோதலின்போது விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இராணுவத்தரப்பில் மூன்று பேர் கொல்லப்பட்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### மருததுவபீட

கூறுகிறது. ஆய்வுகூட வசதியின்மை, இடப் பற்றாக்குறை போதிய ஆசிரியர்கள் இல்லாமை மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் பற்றாக்குறை போன்ற பல குறைபாடுகள் நிலவும் வேளையில் திடீரென நிர்வாகம் எடுத்த இந்த முடிவு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும்,

மாணவர்களை மேலதிகமாக அனுமதிக்கும் வழக்கம் சிறிது காலம் நீடிக்குமானால் கற்பித்தலும், மதிப்பீடும் வெறும் பாசாங்காகி விடும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

---

நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள் யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும்.

[சி-4421]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பகிஷ்கரிப்பு பற்றிய

## நுண்கலைக் கழக ஆசிரியர் சங்க அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பண்ணிசை பயிற்றல் சம்பந்தமாக இராமநாதன் நுண்கலைக்கழக ஆசிரியர் குழு அதன் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் நன்கு அறிந்து அதனைத் தனியான ஒரு பயிற்சி நெறியாக்க வேண்டும் என்பதை ஏற்கனவே வலியுறுத்தியிருக்கின்றது.

இவ்வாறு இராமநாதன் நுண்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பத்மலிங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பொன்று கூறுகிறது

மேலும் இப்போதிருக்கின்ற விதானத்தை ஏற்ற அளவு பிரிவுபடுத்த வேண்டும் என்றும் ஒத்துக்கொண்டிருக்கிறது அண்மைக்காலத்தில் நுண்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறும் மாணவர்கள் தற்போது பாரம்பரிய திருமுறைப் பாராயண முறையினை ஓர் அளவிற்கு அறிந்தே செல்கின்றனர் என்றும்

இத்துறையினை மேலும் வளர்ப்பது எமது கடமை என்றும், இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் வழங்கும் இசைப் பயிற்சி இந்திய நிறுவனங்களில் வழங்கப்படும் இசைப் பயிற்சியின் தரத்துக்கு இணையாக இருக்க வேண்டும் என்பது ஆசிரியர்களது அவாவாகும் என்றும் அந்தச் செய்தி அறிக்கை கூறுகின்றது.

### முன்னேற

இராணுவத்தினருக்குப் பக்கபலமாக சுப்பசெனிக் குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் சீப்பிளேன் ஒன்றும் விடுதலைப் புலிகள் நிலைகள்மீது கடும்தாக்குதலை நடத்தின. இதேசமயம், பலாலி இராணுவ முகாமில் இருந்து புலிகளின் நிலைகளை நோக்கிப் பலத்த எறிகணை வீச்சும் இடம்பெற்றது இராணுவத்தினரை முன்னேற விடாது விடுதலைப்புலிகள் கடும் சமர் புரிந்தனர்

புலிகளின் எதிர் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் மாலைநேரம் இராணுவம்பின் வாங்கிச் சென்று முகாமிற்குள் முடங்கிக் கொண்டது

இச் சண்டையில் இராணுவத்தினருக்கு பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது.

### ஆயுதம்மீட்பு

இம்மோதலின் போது இராணுவத்தினரிடம் இருந்து சில இராணுவப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

| | |
|---|---|
| ★ ரி-56-2ரகதுப்பாக்கி | - 01 |
| ★ ஐ எம். ரவைகள் | -300 |
| ★ சூ சோடி | - 01 |
| ★ கெல்மட் | - 01 |
| ★ கிட்பாக் | - 01 |

## இரத்தம் தேவை

யாழ் போதனாவைத்திய சாலை இரத்த வங்கிக்கு சகல வகை இரத்தங்களும் தேவைப் படுகிறது இரத்ததானம் செய்ய ஆர்வமுள்ளோர் உடனடியாக பாலம் பணிமனையில் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பர)

### ராணுவத்தில்

பான இடங்களை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர்.

இடம் பெயர்ந்து செல்லும் மக்களை நோக்கி நேற்று மாலை 3.30 மணியளவில் உலங்குவானூர்தியொன்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

### வல்வையில்

இராணுவ முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சும். வடமராட்சிக் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த பீரங்கிப் படகுகளிலிருந்து பலத்த பீரங்கித் தாககுதல்களும் மேற் கொள்ளப்பட்டன.

வல்வை நெடிய காட்டுபகுதியில் மூன்று குண்டுகள் வீசப்பட்டன இதில் ஏழு பொது மக்கள் பலியாகினர் பொலிகண்டி வீரபத்திரர் கோவிலடியில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன இதில் ஒருவர் பலியானார் ஐவர் காயமடைந்தனர் வல்வை காந்தரூபன் பகுதியில் வீசப்பட்ட குண்டிற்கு ஒருவர் காயமடைந்தார்.

இத் தாக்குதல்களினால் பலியாகியோரின் விபரம் வருமாறு: சௌ. சாந்தினி வயது 27 திருவில் வல்வெட்டித் துறை) வீரச் செல்வன் (வயது 19 வல்வெட்டித் துறை), நாகலஷ்மி (வயது37, வல்வெட டித்துறை) வி. நவரத்தினம் (வயது 55, குச்சம் வல்வெட்டித்துறை), திருமதி நா. நவரத்தினம் (வயது 53 வல்வெட்டித்துறை ஆனந்தவேல்(வயது47வேம்படி வல்வெட்டித்துறை), நேசன்சௌந்தரநாயகம் (வயது 23. தெனியம்பை, வல்வெட்டித் துறை). சிவசம்பு (ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை) ஜெயவீரசிங்கம் மயூரி (8மாதம், வல்வெட்டித்துறை), இக் குழந்தை அதிர்ச்சியினால் மரணமாகியுள்ளது

இத்தாக்குதலில் காயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் விடரம்:

எஸ். பாலச்சந்திரமூர்த்தி (வயது 63) காட்டுவளவு வல்வெட்டித்துறை, எம். செல்வலிங்கமூர்த்தி (வயது 15) பொலிகண்டி, திருமதி வள்ளிக்கொடி (வயது 44) தெனியம்பை. எஸ். வினோதினி (வயது 25) தீருவில் வல்வெட்டித்துறை, எஸ்.பசீலன் (வயது 20, வல்வெட்டித்துறை, ஆர் தங்கேஸ்வரன் (வயது 28) பொலிகண்டி. வி ஜெயவர்மா (வயது 19, பொலிகண்டி, எஸ் நேசராசா (வயது 24) பொலிகண்டி எம். திருப்பதி (வயது 30) பொலிகண்டி, தே. சந்திரகுமாரி (வயது 11) வல்வெட்டித்துறை, ந விமலாதேவி (வயது 27)வல்வெட்டித் துறை எஸ் சுந்தரம் (வயது 60) ஆதிகோயிலடி வல்வெட்டித்துறை, மஞ்சுளாதேவி (வயது 23) மயிலியதனை தொண்டமானாறு, கதிர்காமர் கட்டி வயது 36) தெனியம்பை வல்வெட்டித்துறை. கே. நரேந்திரன் (வயது 17) வல்வெட்டிததுறை, எஸ் றோசான் (வயது 18) வல்வெட்டித்துறை, எஸ். கண்ணன் (வயது 16) வல்வெட்டித் துறை, கே. ராஜா (வயது 19) வல்வெட்டித்துறை கே. றபாஸ் (வயது 18) வல்வெட்டித்துறை, எஸ். துஷ்யந்தன் (வயது 18) வல்வெட்டித்துறை எஸ். வன்னி (வயது 19) வல்வெட்டித்துறை

இத் தாக்குதலின் போது வல்வை மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பொலிகண்டி வீரபத்திரர் ஆலயம், பொலிகண்டி ப.நோ.கூ. சங்க கிளைகள் இரண்டு, சமரபாகு உபதபால் நிலையம், கணபதி படிப்பகம், பொலிகண்டி பாரதி படிப்பகம் என்பனவும் பொதுமக்கள் பலரின் வீடுகளும் சேதமடைந்துள்ளன

இத் தாக்குதல்களையடுத்து இப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

காலை தொடக்கம் மாலை வரை தாக்குதல்கள் இடம் பெற்றவண்ணம் இருந்தன.

[25]